


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில் கட்டப்பட்டு வரும் 2.5 இலட்சம் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணிகளை இன்று (24.07.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண் : 477/2016 நாள் : 24.07.2016

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ரூ.109.80 கோடி செலவில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்ட பணிகளை மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி.அவர்கள் இன்று (24.07.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களின் அன்றாட தேவையான குடிநீர் தடையின்றி கிடைப்பதற்காக, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தால் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூரில் கட்டப்பட்டு வரும் 2.5 இலட்சம் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி பணிகளை மாநிலங்களவை உறுப்பினர் திரு.அ.விஜயகுமார் எம்.பி அவர்கள் இன்று (24.07.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்து தெரிவித்துள்ளததாவது :–

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் தடையின்றி குடிநீர் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் அழகியபாண்டிபுரம், பூதப்பாண்டி, தாழக்குடி, தேரூர், மைலாடி, மருங்கூர், கொட்டாரம், அழகப்பபுரம், ஆரல்வாய்மொழி ஆகிய 9 பேரூராட்சிகள் மற்றும் தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் இராஜக்கமங்கலம் ஒன்றியங்களின் 246 ஊரக குடியிருப்புகளுக்கு, கோதையாற்றினை நீராதாரமமக கொண்ட சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய கூட்டுக்குடி நீர் திட்டம் ரூ.109.8 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் சுத்திகரிப்பு நிலைய பணிகள், குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் வெவ்வேறு பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதுவரை 30 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன என தெரிவித்தார்.

ஆய்வின் போது தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு.சேவியர் மனோகரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் திரு.ஒய்.அருள்தாஸ் உதவி நிர்வாக பொறியாளர்கள் திரு.ஆர்.மனோகரன், திரு.பி.மைக்கேல் சேவியர், உதவிப்பொறியாளர் திரு.எஸ்.இராஜேந்திரன் மற்றும் திரு.சந்திரன், திரு.தாணுபிள்ளை உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.